©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 32] CHENNAI, THURSDAY, JANUARY 27, 2011
Thai 13, Thiruvalluvar Aandu–2042

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், திருவள்ளூர்.**

**திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கோட்டைகுப்பம் ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் குறித்த அறிவிப்பு.**

*(ந.க. எண் 34878/2007/அ3/ஊ.இ./ஊ.)*

**No. VI(2)/92(a)/2011.**

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கோட்டைகுப்பம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி A. மேரி ஸ்டெல்லா என்பவர் சுனாமி ராஜிவ்காந்தி வீடுகள் ஒதுக்கீடு செய்ய பயனாளிகளிடம் கையூட்டு பெற்று ஊழல் செய்தமைக்காகவும், ஊராட்சி நிதியிலிருந்து விதிமுறைகள் கடைபிடிக்காமல் ரூ. 4,44,779/– எடுத்து முறைகேடுகள் செய்தமைக்காகவும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205 உட்பிரிவு 11–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி கோட்டைகுப்பம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி A. மேரி ஸ்டெல்லா என்பவரை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து இதன்மூலம் அறிவிப்பு செய்யப்படுகிறது.

திருவள்ளூர்,
2011 ஜனவரி 24.

**T.P. ராஜேஷ்,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித்தலைவர்.*

**திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மோரை ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் குறித்த அறிவிப்பு.**

*[ந.க. எண் 1929/10/அ3/உ.இ.(ஊ).]*

**No. VI(2)/92(b)/2011.**

திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், மோரை ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி கே. அமுல்ராணி குமார் என்பவர் ஊராட்சியில் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் உள்ள மனைகளுக்கு பத்திரப்பதிவு செய்ய தடையின்மைச் சான்று வழங்கி தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்திருப்பதுடன், ஊராட்சி நிதிக்கு பெருமளவு நிதியிழப்பு ஏற்படுத்தி முறைகேடு செய்திருப்பதும் மற்றும் ஊராட்சி நிதியில் பல்வேறு தலைப்புகளின்கீழ் விதிமுறைகளை பின்பற்றாமல் செலவினம் மேற்கொண்டு அதன் மூலம் ஊராட்சி நிதிக்கு ரூ. 28,75,113/– இழப்பு ஏற்படுத்தியது ஆகிய காரணங்களுக்காக இவர் தொடர்ந்து ஊராட்சி மன்றத் தலைவராக செயல்பட்டால் ஊராட்சி நிதிக்கு பெருமளவு நிதியிழப்பு ஏற்படுத்துவார் என்பதுடன் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வார் என்பதை கருத்தில் கொண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205 உட்பிரிவு (11)–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினை பயன்படுத்தி மோரை ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி கே. அமுல்ராணி குமார் என்பவரை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து இதன்மூலம் அறிவிப்பு செய்யப்படுகிறது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262(1)–ன்கீழ் இந்த பதவி நீக்கம் குறித்த அறிவிப்பு ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்.

திருவள்ளூர்,
2011 ஜனவரி 24.

**T.P. ராஜேஷ்,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித்தலைவர்.*

**திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கும்மனூர் ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் குறித்த அறிவிப்பு.**

*[ந.க. எண் 1760/2007/அ3/உ.இ.(ஊ).]*

**No. VI(2)/92(c)/2011.**

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கும்மனூர் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி ம. ஏகவள்ளி என்பவர் கும்மனூர் ஊராட்சிக்கு சொந்தமான புறம்போக்கு நிலங்களிலுள்ள பச்சை மரங்களை தமிழ்நாடு ஊராட்சிகள் (பொது ஏலம் நடத்துதல் மற்றும் விற்பனை) விதிகள் மற்றும் அரசாணை எண் 277, ஊரக வளர்ச்சி (சி4) துறை, நாள் 22–11–2001–ல் தெரிவித்துள்ள விதிமுறைகளை பின்பற்றாமல் தன்னிச்சையாக ஏலம் விட்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 அதன் பிரிவுகளின்கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தினை துஷ்பிரயோகம் செய்து ஊராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியமைக்காக தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205 உட்பிரிவு 11–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி கும்மனூர் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி ம. ஏகவள்ளி என்பவரை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து இதன்மூலம் அறிவிப்பு செய்யப்படுகிறது.

திருவள்ளூர்,
2011 ஜனவரி 24.

**T.P. ராஜேஷ்,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித்தலைவர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.